Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை

தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 075 | ஞாயிற்றுக்கிழமை Sunday | 14.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode

# 52வது பிறந்த நாள்: தொகுதி மக்கள் மத்தியில் கேக் வெட்டி கொண்டாட முதலமைச்சர் விஜய் திட்டம்!



த.வெ.க. தலைவரும், தமிழகத்தின் முதல்-அமைச்சருமான ஜோசப் விஜய், வரும் 22-ந் தேதி தனது 52-வது பிறந்த நாளை கொண்டாடுகிறார். நீண்ட பல காலமாக நடிகராக பிறந்த நாளை கொண்டாடிய அவர், முதல்-அமைச்சராகபதவியேற்ற பிறகு கொண்டாடும் முதல் பிறந்த நாள் இது.

அதனால், இந்த முறை பிறந்த நாளை வித்தியாசமாக முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் கொண்டாட திட்டமிட்டு இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த 17-வது சட்டசபை தேர்தலில் பெரம்பூர்,திருச்சிகிழக்கு ஆகிய 2 தொகுதிகளிலும் த.வெ.க. சார்பில் ஜோசப் விஜய் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பின்னர், திருச்சி கிழக்கு தொகுதி எம்.எல்.ஏ. பதவியை அவர் ராஜினாமா செய்தார். பெரம்பூர் தொகுதி எம்.எல்.ஏ.வாக உள்ளமுதல்-அமைச்சர் ஜோசப் விஜய்க்கு, வியாசர்பாடி பகுதியில் எம்.எல்.ஏ. அலுவலகம் தயாராகிவருகிறது.

இந்த எம்.எல்.ஏ. அலுவலகத்தை, தனது பிறந்த நாளானவரும்22-ந்தேதி திறக்க திட்டமிட்டுள்ள முதல்-அமைச்சர் ஜோசப் விஜய், தொகுதி மக்களுடனேயே கேக் வெட்டி பிறந்த நாளை கொண்டாடவும் முடிவு செய்துள்ளாராம்.

மேலும், மாதந்தோறும் குறிப்பிட்ட ஒரு நாளை, தொகுதி மக்களுக்காக செலவிடவும் முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் திட்டமிட்டுள்ளாராம். அன்றையதினம்தொகுதி மக்களிடம் இருந்துநேரடியாக மனுக்களை பெற்று,அதன்மீதுவிரைவாக உரிய நடவடிக்கை எடுக்கவும் அவர் முடிவு செய்துள்ளாராம்.

தேவைப்பட்டால், பெரம்பூர் தொகுதி கட்சி அலுவலகத்திலேயே முதல்-அமைச்சர் ஜோசப் விஜய் தங்கியிருக்கவும் திட்டமிட்டு உள்ளாராம். அதனால், அந்த அலுவலகம் தங்கும் வசதியுடனேயே தயாராகி வருகிறதாம்.

# "பாஜகவை விமர்சித்தால் ஆட்சிக்கு ஆபத்து வருமென பயமா?" முதலமைச்சர் விஜய்க்கு தி.மு.க. தலைவர் ஸ்டாலின் கேள்வி



சென்னை: "கரூர் சி.பி.ஐ.வழக்கில் இருந்து தப்பிக்கத்தான் நீங்கள் டெல்லிக்குச் சென்றீர்களா? பா.ஜ.க.வை உறுதியாக விமர்சித்துப் பேசினால் உங்கள் ஆட்சிக்கு ஆபத்து வந்துவிடும் என்று பயப்படுகிறீர்களா? இந்தக் கேள்வியையெல்லாம் கேட்டு, ஒரு முதல்வராக நீங்கள் அரசுக் கூட்டத்தில் கலந்துகொண்டதை உங்களைப் மாதிரிநான்தரம்தாழ்ந்து விமர்சிக்க விரும்பவில்லை" என்று திமுக தலைவர் ஸ்டாலின் பேசினார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற திமுக மகளிரணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்டு மு.க.ஸ்டாலின் பேசியது: "இப்போது எதிர்க்கட்சியாக இருக்கிறநாம்,மீண்டும்ஆளும் கட்சியாக மாற வேண்டும் என்றால், இன்னும் சுறுசுறுப்பாகவும் வேகமாகவும் செயல்பட வேண்டும். அதற்கான களமாகத்தான் இந்தக் கூட்டம் நடந்து கொண்டிருக்கிறது. "ஆறு மாதம் கூட விமர்சனம் செய்யாமல் இருக்கும் மாதிரி இந்த ஆட்சி நடக்குமா?" என்று,ஏற்கெனவே நான் கலந்து கொண்ட சில நிகழ்ச்சிகளில் பேசினேன். உடனே, அதை உண்மைக்கு மாறாகத் திரித்து, "ஆட்சியைக் கவிழ்க்க சதியா?" என்று கேட்டு நமது எதிரிகள் அழ ஆரம்பித்து விட்டார்கள். நான் ஏற்கெனவே நிறைய முறை சொல்லிவிட்டேன். இன்னொரு முறையும் இந்தக் கூட்டத்தில் நான் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தி.மு.க பொறுப்பான,விழிப்பான எதிர்க்கட்சியாகத் தன்னுடைய கடமையை உறுதியாகச் செய்யும். இந்த ஆட்சியின் தோல்விகளை நாம் தொடர்ந்து சுட்டிக் காட்டுவோம்; கேள்விகளைப் கேட்போம்.அடுத்து எப்போது தேர்தல் நடந்தாலும் மக்களே இந்த ஆட்சியை அகற்றுவார்கள். கடந்த ஐந்து ஆண்டுகாலம் நடைபெற்ற நம்முடைய திராவிட மாடல் ஆட்சியே மகளிருக்கான ஆட்சிதான் என்பதைப் பற்றி, இங்கே எனக்கு முன்புதலைமையேற்றுப் பேசியகனிமொழி குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

ஆட்சிக்கு வந்து முதல் கையெழுத்தான விடியல் பயணத்தில் தொடங்கி, கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் என்று ஏராளமான புதுமையான திட்டங்களை நாம்தான் உருவாக்கினோம். அது மக்களுக்குச் சரியாகச் சென்றடைகிறதா என்று பார்த்துப் பார்த்துச் செய்து கொடுத்தோம். அதுமட்டுமல்ல, இப்போது நடந்து முடிந்த தேர்தலில் கூட பெண்களுக்குத்தான் நிறைய வாக்குறுதிகள் நாம் கொடுத்தோம். குறிப்பாக, 8 ஆயிரம் ரூபாய் கூப்பன் கொடுக்கிற இல்லத்தரசி திட்டம், அதுமட்டுமா, உரிமைத்தொகை உயர்வு என்று நிறைய இருக்கின்றன.

ஆனால், இப்போது மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்று, நீங்களேசோஷியல்மீடியாவில் நிறைய வீடியோக்களைப் பார்த்திருப்பீர்கள். நாள்தோறும்நடைபெறும்குற்றச்சம்பவங்கள், சென்னையையும் பல ஊர்களையும் இருட்டில் மூழ்கடிக்கிற மின்வெட்டு, விவசாயிகளின் பயிர்க்கடன் தள்ளுபடி என்று நடந்த நாடகம் என்று இப்படிப் பலதரப்பட்ட மக்களும், "ஏன்டா இந்த ஆட்சிக்கு வாக்களித்தோம்" என்று கோபமாக, ஆவேசமாக, வருந்திக் கொண்டிருக்கிறார்கள். ஓட்டு போட்டவர்களும் வருத்தப்படுகிறார்கள்; ஓட்டு போடாதவர்களும் வருத்தப்படுகிறார்கள். அதுதான் இப்போது இருக்கும் நிலை.

சாதாரணமாக சொல்கிறார்கள், "ஏதோ இரண்டு ஓட்டு போட்டோம்.நீங்கள்தான் ஆட்சிக்கு வருவீர்கள் என்று நினைத்தோம். இப்படி ஆகிவிட்டதே". இப்போது இந்த ஆட்சியில் குற்றங்கள் பெருகிவிட்டன. நியூஸ் சேனல்களை வைத்தாலே, கொடூரமான குற்றச் சம்பவங்கள்தான் செய்திகளாக வருகின்றன. எனக்கு முன்பு பேசிய கனிமொழி சொன்னார்கள், சமீபத்தில் ஸ்ரீவைகுண்டத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பெண்ணுக்கு, அந்தக் கட்சியினரே பாலியல் தொல்லை கொடுத்திருக்கிறார்கள். இதுபற்றி இரண்டு அமைச்சர்களிடம் முறையிட்டும் நீதி கிடைக்கவில்லை.நேற்று கூட, ஆலந்தூரிலும், சேலத்திலும்ஆளுங்கட்சியைச்சேர்ந்தநபர்களே பாலியல் குற்றங்களில் ஈடுபட்டதாகச் செய்திகள் வந்தன.

தேர்தலுக்கு முன்பு இன்றைக்கு இருக்கும் முதல்வர் பேசிய அனைத்துக் கூட்டங்களிலும் பெண்கள் பாதுகாப்பு பற்றித்தான் தொடர்ந்து பேசினார். இன்னொன்றும் சொன்னார். "எங்கு நல்ல விஷயம் நடந்தாலும் அது நம்ம பசங்கதான் செய்ததாக இருக்க வேண்டும்" என்று சொன்னார். ஆனால் இன்றைய நிலை என்ன?. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிரான பெரும்பாலான குற்றச்செயல்களில் த.வெ.க. நிர்வாகிகள் சம்பந்தப்பட்டு இருக்கிறார்கள் என்று செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பிரச்சாரத்தில் பேசும்போது, "த.வெ.க. ஆட்சி பாதுகாப்பு கொடுக்கும்" என்று சொன்னார்கள். ஆனால், இப்போது த.வெ.க.விடம் இருந்து பாதுகாப்பு வேண்டும்என்றுமக்கள் கேட்கிற நிலைக்கு இன்றைக்குத் தமிழ்நாடு இருக்கிறது.

பொதுவாக எல்லோரும் ஷாப்பிங் போனால் என்ன வாங்குவார்கள்? ஆடைகள் வாங்குவார்கள். வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவார்கள்.ஆனால், இப்போது நம்முடைய முதல்வர் என்ன செய்கிறார் தெரியுமா? அ.தி.மு.க. எம்எல்ஏ-க்களை ஷாப்பிங்செய்துகொண்டிருக்கிறார். நமக்கு என்ன சந்தேகம் என்றால், அவர் ஆட்சி மீது அவருக்கே நம்பிக்கை இல்லையா அல்லது அவருக்கு ஆதரவு கொடுத்திருக்கிற மற்ற கட்சிகள் மீது நம்பிக்கை இல்லையா? முதலில் அவர் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள அ.தி.மு.க. எம்எல்ஏ-க்களை த.வெ.க.வுக்கு ஆதரவாக வாக்களிக்க வைத்தார். இப்போது, அவர்களை ராஜினாமா செய்ய வைத்துவிட்டு, அடுத்த நொடியே தன்னுடைய கட்சியில் இணைத்திருக்கிறார்.

இந்த மாதிரி செய்தியை எல்லாம் பார்க்கும்போது உங்களுக்கு என்ன ஞாபகம் வரும்? பா.ஜ.க. மற்ற மாநிலங்களில் செய்வதையே இங்கு முதல்வர் விஜய் செய்து கொண்டிருக்கிறார். அதாவது, பா.ஜ.க.வின் ஜெராக்ஸ் மாதிரி செயல்படுகிறார். உதவி என்று கேட்டபோது அவருக்கு ஆதரவு கொடுத்த கட்சிகள் எல்லாம்,

இதைப் பற்றிப் கேட்கும்போது,தர்மசங்கடத்தில் தவிக்கிறார்கள்.

கொஞ்சம் யோசித்துக் பாருங்கள். ஒரு கட்சியில் பல பேருக்கு இடையில் ஒருவருக்குத்தான் வேட்பாளராக வாய்ப்புக் கிடைக்கிறது. எத்தனையோ தொண்டர்கள் உழைக்கிறார்கள், கூட்டணிக் கட்சிகளும் இவர்களது வெற்றிக்காக உழைக்கிறார்கள். இத்தனை பேரின் உழைப்பில் வெற்றி பெற்றுவிட்டு, வாக்குப்பதிவின் போது கைவிரலில் வைத்த மை அழிவதற்குள், ராஜினாமா செய்துவிட்டு இன்னொரு கட்சிக்கு ஆதரவு கொடுக்கிறார்கள். ஜனநாயக சக்திகள் நியாயமாக இதைக் கேள்வி கேட்க வேண்டுமா, வேண்டாமா? ஒரே மாதத்தில் எம்எல்ஏ-க்கள் ராஜினாமா செய்துவிட்டு த.வெ.க.வில் சேர்கிறார்களே,அந்தளவுக்கு அப்படி என்ன ஆ:.பர் த.வெ.க.வில் கிடைத்திருக்கும் என்று பேச வேண்டுமா வேண்டாமா? ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்குகிற அசிங்கமான ஆட்சியாக இந்த ஆட்சி இருக்கிறது.

வரி விளம்பரங்கள்

தினத்தளம்
DHINATH DHALAM
மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்
தொடர்புக்கு : ☎ +919444082959

# அசாமில் இந்திய விமானப் படை விமானம் விபத்து 5 விமானிகள் உயிரிழப்பு

புது டெல்லி: அசாமில் உள்ள ஜோர்ஹாட் விமானப்படை தளத்தில் இந்திய விமானப்படைக்கு சொந்தமான AN-32 சரக்கு விமானம் விபத்துக்குள்ளானதில் 5 விமானிகள் உயிரிழந்தனர்.



அசாமின் ஜோர்ஹாட் பகுதியில் அமைந்துள்ள ரௌரியா விமானப்படை தளத்தில் AN-32 ரக ராணுவ விமானம் தரையிறங்கும்போது விபத்துக்குள்ளானதில் ஐந்து விமானிகள் உயிரிழந்துள்ளதாக இந்திய விமானப்படை தெரிவித்துள்ளது. விபத்து நடைபெற்ற இடத்திற்கு மூத்த விமானப்படை அதிகாரிகள் நேரில் சென்றுள்ள நிலையில், அந்த இடத்திலிருந்து சில காட்சிகள் வெளியாகியுள்ளன. அந்த காட்சிகளின்படி, விமானம் இரண்டாக உடைந்துள்ள நிலையில், முன்பகுதியிலிருந்து தொடர்ந்து புகை வெளியேறிக் கொண்டிருக்கிறது. விபத்து நடைபெற்ற இடத்தில்மீட்புப்பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில், முதலில் தீயை அணைக்கும் பணிகள் நடைபெற்று வருவதாகஇந்தியவிமானப்படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த விபத்துக்கான காரணம் குறித்த கூடுதல் விவரங்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விபத்தில் ஐந்து விமானிகள் உயிரிழப்பு

ராணுவ விமானம் விபத்துக்குள்ளானதில் அந்த விமானத்தில் பயணித்த பிரசாந்த் சிங், சுபம் குமார், ஜிதேந்திர சர்மா, க்ஹெமரம் குமாவட் (Khemaram Kumawat), டானிஷ் அலம் (Daniesh Alam) ஆகியோர் உயிரிழந்துள்ளதாக இந்திய விமானப்படை அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குஆழ்ந்த இரங்கலை தனது எக்ஸ் தளப் பக்கத்தில் வாயிலாகத் தெரிவித்துள்ள இந்திய விமானப்படை, இந்த இக்கட்டான நேரத்தில் அவர்களின் குடும்பத்திற்க உறுதுணையாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# நந்தா பாலிடெக்னிக், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் சார்பில் வளாகத்தேர்வு



நந்தா பாலிடெக்னிக், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் சார்பில் இறுதி ஆண்டு பயின்று வெளியேறும் மாணவர்களுக்கென வளாகத் தேர்வு அண்மையில் நடைபெற்றது. இதில் சென்னையில் இயங்கிவரும் உலகின் தலைசிறந்த மோட்டார் வாகனங்களுக்குத் தேவையான பிரேக்குகளை உற்பத்தி செய்யும் TVS நிறுவனத்தின் சார்பு நிறுவனமான "பிரேக்ஸ் இந்தியா" நிறுவனம் பங்கு பெற்றது.

ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளைத் தலைவர் வி.சண்முகன் தலைமையில் நடைபெற்ற இவ்வளாகத் தேர்வினை "பிரேக்ஸ் இந்தியா" நிறுவனத்தின் சார்பில் மனிதவள மேம்பாட்டுத்துறை மேலாளர் கே. ராம் பிரசாத் கலந்துக் கொண்டு குத்து விளக்கேற்றி துவக்கி வைத்தார்.

பின்னர், பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஒருங்கிணைப்பாளர் கே.வி.பிரபு வரவேற்று பேசினார்.

இதனைத் தொடர்ந்து, பாலிடெக்னிக் கல்லூரியின் முதல்வர் ஜீ. மோகன்குமார், மற்றும் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் எஸ். மனோகரன் ஆகியோர் வளாகத்தேர்வில் பங்கு கொண்ட மாணவர்களை வாழ்த்திப் பேசினார்கள்.

பின்னர், ""பிரேக்ஸ் இந்தியா" நிறுவனத்தின் மனிதவள மேம்பாட்டுத்துறை மேலாளர் கே. ராம் பிரசாத் சிறப்புரையாற்றுகையில், இக்கல்லூரியில் எங்களது நிறுவனமானது தொடர்ந்து 14 ஆண்டுகளாக இடைவிடாது வளாகத் தேர்வினை நடத்தி வருவதாகவும், அதற்கு இங்கு பயின்று வரும் மாணவர்கள் நல்ல துடிப்புள்ளவர்களாகவும், தான் ஏற்றுக் கொண்ட பணியினை கண்ணும் கருத்துமாக செய்வதே காரணமாகக் கூறினார்.

மேலும், இவ்வளாகத் தேர்வின் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களுக்குமூன்று ஆண்டு கால பயிற்சியும், அதற்குரிய உதவித்தொகையும் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். இவ்வாறு பயிற்சியில் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த மாணவர்கள் தற்போது மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள நான்குசக்கர வாகன தொழிற்சாலையில் பணிபுரிந்து வருகிறார்கள் என்பதைக் கூறுவதில் பெருமையடைகிறோம் என்றார்.

இவ்வளாகத் தேர்வின் மூலம் நல்ல திறமையுள்ள மாணவர்கள்மட்டும்தேவைப்படுவதால் அதற்குரிய தேர்வுகள் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்க உள்ளோம்

என்றார். இதில் வெற்றி பெற்றவர்கள் நேர்முக தேர்வில் பங்கு பெற்று தனது வேலைவாய்ப்பிற்கான உத்திரவாத சான்றிதழை பெற்றுக் கொள்வார்கள் என்று தெரிவித்தார்.

இவ்வளாத்தேர்வில் 420க்கும்மேற்பட்ட நந்தா பாலிடெக்னிக், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் மாணவர்கள் பங்குப்பெற்று பயனடைந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனைஏற்பாடுசெய்திருந்த கல்லூரி பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஆசிரியர்களுக்கு ஸ்ரீ நந்தா கல்வி அறக்கட்டளையின் அங்கத்தினர் பானுமதி சண்முகன், இணை நிர்வாக அறங்காவலர்களான எஸ்.நந்தகுமார் பிரதீப், எஸ்.திருமூர்த்தி மற்றும் நந்தா தொழில் நுட்ப வளாகத்தின் நிர்வாக அதிகாரி ஏ.கே.வேலுசாமி ஆகியோர் தங்களது பாராட்டுகளைத் தெரிவித்தார்கள்.

### கோவை விஜிஎம் மருத்துவமனை மற்றும் கோவை அத்லெடிக் க்ளப் இணைந்து 6வது முறையாக

# போதையில்லா கோவை என்ற விழிப்புணர்வை முன்வைத்து மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற உள்ளது




கோவை சிங்கா நல்லூர் பகுதியில் கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்து பணியாற்றி வரும் விஜிஎம் மருத்துவமனை, மற்றும் விளையாட்டுத் துறையில் நூற்றாண்டை கடக்கும் கோவை அத்லெடிக் க்ளப் இணைந்து ரன் பார் நேஷன் எனும் தலைப்பில் ஆண்டு தோறும் விழிப்புணர்வு மாரத்தான் போட்டிகளை நடத்தி வருகின்றனர். இதன் 6வது ஆண்டை முன்னிட்டு வரும் 9ம் தேதி கோவை நேரு விளையாட்டு அரங்கில் போதையில்லா கோவை எனும் கரு பொருளின் கீழ், மாபெரும் மாரத்தான் போட்டி நடைபெற உள்ளது. இதற்கான விளம்பர பலகை வெளியீட்டு விழா கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள விஜிஎம் மருத்துவமனையில் இன்று நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராக கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், தமிழக பிற்படு த்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான சம்பத்குமார் மற்றும் சூலூர் சட்ட மன்ற உறுப்பினர் சுகுமார், சிங்காநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர் கிரி பிரசாத், ஆகியோர் கலந்து கொண்டு விளம்பர பலகையினை வெளியிட்டார். தொடர்ந்து இது குறித்து விஜிஎம் மருத்துவமனையின் தலைவர் டாக்டர் மோகன் பிரசாத், விஜிஎம் மருத்துவமனையின் மருத்துவ இயக்குநர் டாக்டர் சுமன், மாரத்தான் விழா ஏற்பாட்டாளர்கள் விஜயகுமார், சீனிவாசன் ஆகியோர் கூறியதாவது..

ஒரு தேசம் முன்னேற கல்வி, விளையாட்டு, ஆரோக்கியம், ஆகிய மூன்றும் சிறப்பாக இருக்க வேண்டும், இதனை வலியுறுத்தி ஆண்டு தோறும் ரன் பார் நேஷன் எனும் தலைப்பில் மாரத்தான் போட்டிகள் நடத்த பட்டு வருகிறது. இந்த ஆண்டு போதையில்லா கோவை என்ற கரு பொருளின் கீழ் வரும் 9.08.2026 தேதி நடைபெற உள்ளது. இதில் சுமார், 5000 த்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு போதையில்லா கோவைக்கு எதிராக ஓட உள்ளதாக தெரிவித்தனர். மேலும் மாரத்தான் போட்டியில் கலந்து கொள்ளுபவர்களுக்கான, சீருடை அறிமுக விழா நிகழ்ச்சியும் நடைபெற்றதாக தெரிவித்தனர். முன்னதாக மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகளுக்கு சீருடைகள்,மற்றும் காலனிகள், வழங்கப்பட்டதுடன் அரசு பள்ளிகளுக்கு கணீணிகள் வழங்கபட்டது.இறுதியாகபல்வேறு ரன்னர்ஸ் க்ளப் மற்றும் நன்கொடையாளர்களுக்கு பாராட்டு விழா நிகழ்ச்சியுடன் விழா நிறைவு பெற்றது..

### இன்றைய நவீன தலைமுறைகள் விரும்பும் வகையில், ப்ரத்யேக க்ளோபல் கிச்சன் வசதிகளுடன் கூடிய

# ரெட்ரோ ஸ்டைல் ரெஸ்டோ பார் துவக்கவிழா நிகழ்ச்சி கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள ஓ பை தாமரா உணவக அரங்கில் துவங்கபட்டுள்ளது



உணவு பிரியர்களின் விருப்பங்களை பூர்த்தி செய்யும் வகையில், அதன் சுவை மாறாமல் சோசியல் லைப்ஸ்டைல்க்கு ஏற்ற வகையில், கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள ஓ பை தாமரா உணவகத்தில்,

குளோபல் கிச்சன், லோக்கல் ஆன்மா என்ற சிந்தனையை முன்நிறுத்தி, புத்தம் புதிய உணவு பட்டியலுடன் கூடிய ரெட்ரோ ஸ்டைலில், ரெட்ரோ பார் துவங்கபட்டு உள்ளது..

கடந்த கால நினைவுகளை கொண்டு வரும் நோக்கத்தில், ஹை டைவ் மக்களை ஒருங்கினைக்கும் வபையில் ரம்மியமான இசை, கலாச்சாரம், சமூக உணர்வை வெளிபடுத்தும் ஒரு மறு வடிவமைப்பை இத்தகைய பார் கொண்டுள்ளது.

கூடுதல் சிறப்பம்சங்ளாக, உலகலாவிய சமையல், உள்ளூர் ஆன்மா என்ற நோக்கில், உணவு பட்டியல் இங்கு தயாரிக்கபட்டுள்ளது. மேல்தட்டு, மற்றும் நடுத்தர வர்க்கத்தினரின் வார இறுதி நாட்கள் கொண்டாடங்களை நடத்த ஏதுவான ஒரு அமைப்பை இத்தகைய ரெட்ரோ பார் கொண்டுள்ளது.

சர்வதேச அளவில் விரும்பி உண்ணும் உணவுகள், தமிழக மக்களுக்கு பரிச்சயமான உணவுகள், இங்கு அனைவராலும் விரும்பும் ஒரு மகத்துவத்தை பெற்றுள்ளது. குறிப்பாக கறிவேப்பிலை பட்டர் கார்லிக் பிரான்ஸ், செட்டிநாடு ஸ்பைஸ்டு லோட்டஸ் ஸ்டெம்ஸ், குறு மிளகு கோழி பீட்சா, மற்றும் ஆச்சி மீன் குழம்பு பவுல், ஆகியவை தனித்துவமிக்க சமையல் கலைஞர்களின் கை வண்ணத்தில் தயாராகி வருகின்றது. இவை உணவுக்காக வாருங்கள், பானங்களுக்காக தங்குங்கள், இவை இரண்டுக்காகவும் மீண்டும் வாருங்கள் என்ற சமையலறை தத்துவத்தை ஏற்படுத்தி உள்ளது. மேலும் இந்த ரெட்ரோ பார் குறித்துஓபைதாமரா உணவகத்தின் பொது மேளாளர் உமாபதி அமிர்தம் கூறியதாவது..

விருத்தோம்பல் அனுபவங்கள் பெரும்பாலும் நம் மனதில் நீண்ட கால நினைவுகளை நமக்குள் ஏற்படுத்திவிடும், அத்தகைய விருத்தோம்பலை ஹை டைவ் வழங்குகின்றது. மாறிவரும் லைப் ஸ்டைலுக்கு ஏற்ற வகையில், மாலை பொழுதை மயக்கும் உணவுகள், காக்டெய்ல்கள், இங்கு உங்களை மீண்டும் மீண்டும் வர தூண்டும் என்றார். கூடுதலாக ரெட்ரோ நைட்ஸ் என்ற தொடர் இசை நிகழ்ச்சிகளும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாகவும், இங்கு தேர்ந்தெடுக்கப்பட்ட இசை, பாடல்கள்,இசை நிகழ்ச்சிகள் உங்களை மெய் மறக்க செய்யும் நிகழ்வாக அமையும் என்று நம்புவதாகதெரிவித்தார். காலை 11மணி முதல் இரவு 11மணி வரை, செயல்படும் ஹை டைவ் உங்களை அடுத்த கட்ட நிலைக்கு கொண்டு செல்லும் என்பதில் ஐயமில்லை என்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு மாவட்டம் காவிரி கரையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற சோழீஸ்வரர் ஆலயத்தில், சுக்கிர பிரதோஷத்தை முன்னிட்டு சுவாமிக்கு சிறப்பு அபிஷேக மற்றும் ஆராதனை பூஜைகள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இவ்விழாவை முன்னிட்டு, மூலவர் சோழீஸ்வரர் மற்றும் நந்திகேஸ்வரருக்கு சுந்தராம்பிகைக்கு பால், தயிர், இளநீர், சந்தனம், விபூதி உள்ளிட்ட 16 வகையான வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகங்கள் செய்யப்பட்டன. தொடர்ந்து சுவாமிக்கு மலர் அலங்காரம் செய்யப்பட்டு, மகாதீபாராதனை காண்பிக்கப்பட்டது. சுக்கிரவாரம் எனப்படும் வெள்ளிக்கிழமையில் வரும் இந்த பிரதோஷ வழிபாடு, செல்வ வளத்தையும் குடும்ப அமைதியையும் தரும் என்பது நம்பிக்கையாகும். இதில் ஈரோடு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு, சமூக இடைவெளியுடன் சுவாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்குப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈஞ்சம்பள்ளி, மகளிர் சுய உதவிக்குழுவினர்கள்பாரம்பரியமுறையில்களிமண்ணைபதப்படுத்திமண்பாண்டங்கள் மற்றும் கைவினைப் பொருட்களை தயாரிக்கும் முறை குறித்து பார்வையிட்டு குழுவினர்களிடம் கலந்துரையாடினார்.



மதுரை மாவட்ட சங்க கட்டிடம் பொதுப்பணித்துறை வளாகத்தில் சிறப்பாக நடைபெற்றது தலைமை ஆர் நாராயணன், வரவேற்புரை எம் தியாகராஜன் துணைத்தலைவர், அஞ்சலி தீர்மானம் எம் சுந்தரம் இணைச் செயலாளர், துவக்க உரை பால்முருகன் மாவட்ட செயலாளர், ஆதரமிளகி மாவட்டத் துணைத் தலைவர், செயலாளர் அறிக்கை எம் பூமிநாதன் வாழ்த்துரை சி ராஜேந்திரன் மாவட்ட இணை செயலாளர், மு பரமேஸ்வரன் மாவட்ட தலைவர், மேலும் தொகுப்புரை தீர்மானம் மற்றும் விவாதத்தை மாநிலதலைவர் என். ஜெயச்சந்திரன் மற்றும் நன்றியுரை மாநில துணைத்தலைவர் டி. கிருஷ்ணன் ஆகியோரும் நிகழ்ச்சியில் அஞ்சலி தீர்மானம் வாசிக்கப்பட்டது மாநில செயலாளர் தோழர் குரு. சந்திரசேகர் இறப்பிற்கும் முன்னாள் மாவட்ட நிர்வாகி ஆர். சொக்கலிங்கம் மனைவி திருமதி மீனாட்சி இறப்பிற்கும், மாவட்ட துணைத் தலைவர் திரு பி. தினகரசாமி மனைவி கலாவதி இறப்பிற்கும் மதுரை மாநகராட்சி துணை மேயர் தோழர் நாகராஜன் தாயார் இறப்பிற்கும் நமது சங்க உறுப்பினர்கள் பலர் இறப்பிற்கும் அஞ்சலியை செலுத்தினார்கள்.



நேற்று 9 ஆம் வகுப்பு +2 வகுப்பு மாணவிகளுக்கு படிபதற்க்கு தேவையான அணைத்து பொருட்களையும் பார்த்து பார்த்து வாங்கி குடுத்த மதிப்பிற்குரிய சிங்கிலி பட்டி மகேந்திரன், கட்டபொம்மன் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றி மேலும் தகவல் இந்த மாணவிகளின் தந்தைக்கு 2 கிட்டினியும் செயலிழந்து விட்டது அவர்களின் அம்மாவும் எங்கு இருக்கிறார் என்று தெரியவில்லை அவர்கள் பாட்டி வீட்டில் வசித்து வருகிறார்கள் மிகவும் கஸ்டபடும் குடும்பம் இவர்களது வாழ்வாதாரத்திற்கு உதவும் நல் உள்ளங்கள் நேரடியாகவே அவர்களுக்கு உதவலாம் விருப்பமுள்ளவர்கள் எங்களை தொடர்பு கொள்ளவும் நமது அண்ணாமலை அண்ணாவின் வழியிலும் அவரின் கொள்கையிலும் நாம் இணைந்து பயணிப்போம்



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி மொடக்குறிச்சி, பத்தையம்பாளைத்தில் சி.எஸ்.ஐ நிதியுதவி துவக்கப்பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு பள்ளி மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்டம், அரச்சலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஈஞ்சம்பள்ளியில் உள்ள இலங்கைத்தமிழர்கள் மறுவாழ்வு முகாமில் கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளின் கட்டுமானப் பணிகளை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



கோவையில் குயின் ஆப் கோயம்புத்தூர் என்ற பெயரில் நடைபெற்ற அழகிப் போட்டியில் அழகுப் பெண்கள் அன்னநடை போட்டு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்தனர். பெண்களின் திறமைகள், தன்னம்பிக்கை, தனித்துவம் மற்றும் ஆளுமை வளர்ச்சியை வெளிப்படுத்தும் நோக்கில் ராவ் மருத்துவமனை மற்றும் ரோட்டரி கிளப் ஆஃப் கோயம்புத்தூர் சார்பில் குயின் ஆப் கோயம்புத்தூர் என்ற பழகிப் போட்டி கோவையில் நடைபெற்றது இதன் இறுதிச்சுற்று இன்று அவிநாசி சாலையில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் பல்வேறு கட்டத் தேர்வுகளை வெற்றிகரமாக கடந்த போட்டியாளர்கள் பங்கேற்று, தங்களது திறமைகளையும் ஆளுமையையும் வெளிப்படுத்தினர். மேலும், பிரபல திரைப்பட நடிகை ஹன்சிகா மோத்வானி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றியாளர்களுக்கு மகுடம் சூட்டி கௌரவித்தார்.

திருவள்ளூர் மாவட்டத்தில மூடப்பட்ட சமூக நீதி விடுதிகளை மீண்டும் திறக்க

# திருவள்ளூர் கலெக்டர் எஸ்.கவிதாவிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர் சார்பில் நிறுவனத்தலைவர் சா.அருணன் கோரிக்கை மனு



மனு குறிப்பிட்டுள்ள. கோரிக்கைகள் விவரம் திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையில் பணியாற்றும் சமையலர்கள் இரவு காவலர்களாக பணியாற்றும் ஊழியர்களை பணிமூப்பு அடிப்படையில் அலுவலக உதவியாளர்கள் உயர்வு வழங்க வேண்டும் நம் மாவட்டத்தில் பெரும்பாலான மாணவர் மாணவியர் விடுதிகள் மாணவர்கள் இல்லாத காரணத்தால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது மீண்டும் மாணவர் சேர்க்கையை நடத்தி மூடப்பட்ட விடுதிகளை திறக்க வேண்டும் ,

மாணவர்கள் அதிகம் சேராத விடுதிகளில் அப்பகுதியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கான இரவு பாடசாலையாக அமைத்தும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பயிற்சி அளிக்கும் பயிற்சி மையமாக உருவாக்க வேண்டும்

நம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையில் 20 22ஆம் இடைநிலை ஆசிரியர்களாக பணியாற்றி பதவி உயர்வு பெற்று பட்டதாரி ஆசிரியர்களாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இதுநாள் வரை பணி வரன்முறை செய்ய ப்பட வில்லை பணி வரன்முறை செய்து உதவிட அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

உபயோகிக்கப்படாத பள்ளிக்கட்டடங்கள் இடித்து பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்த வேண்டும் , பொது பணித்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து இடுப்பதற்கான வாய்ப்பு இல்லை கட்டடத்தை வேண்டுமானால் சரி செய்து உபயோகப்படுத்தலாம் என தெரிவிக்கின்றனர் கட்டடங்கள் மைதானத்தில் குறுக்கே இருப்பதால் மாணவர்கள் ஆசிரியர்கள் பார்வையில் இருப்பதில்லை மாணவர்களை கட்டுக்குள் வைத்திருப்பது பெரும் சிரமமாக இருக்கிறது இந்தநிலைய உரிய அளவில் ஆய்வு செய்து உபயோகம் இல்லா பள்ளிக் கட்டடங்களை இடக்க ஆவன செய்ய வேண்டும்

மேற்கண்ட கோரிக்கைகள பரிசீலனை செய்து நிறைவேற்றி உதவிட தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மா மதிப்புமிகு எஸ்.கவிதா அவர்களிடம் வழங்கி அனைத்துறை கோரிக்கைகளை தெரிவித்தார் மாவட்ட ஆட்சித் தலைவர் நிதானமாக வேறு எந்த கோரிக்கைகள் இருக்கிறது என பொருமையுடன் கேட்டு தங்கள் கோரிக்கைகளை அந்தந்த மாவட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்து நிறைவேற்றுவதாக தெரிவித்தார் முன்னதாக புதியதாக பதவியேற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வாழ்த்துத்தெரிவித்து பொன்னாடை அணிவித்து புத்தகம் பரிசாக வழங்கி வாழ்த்தினர் இந்த நிகழ்வில் மாநில மாவட்ட வட்ட ஒன்றிய நிர்வாகிகள் என 150 க்கும் மேற்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பினர் கலந்துக் கொண்டனர்

# ஆட்டோ கட்டணத்தை தமிழக அரசு உயர்த்த வேண்டும்: ராமதாஸ் வலியுறுத்தல்



சென்னை: பாமக நிறுவனர் ராமதாஸ் நேற்று வெளியிட்ட அறிக்கை : தமிழகத்தில் ஆட்டோக்களுக்கான கட்டணம் கடைசியாக 20 13-ம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்டது.அப்போது நிர்ணயிக்கப்பட்ட கட்டணப்படி ஆரம்ப 1.8 கிலோ மீட்டருக்கு ரூ.25, அதன்பின் ஒவ்வொரு கிலோ மீட்டருக்கும் ரூ.12 என நிர்ணயிக்கப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளாக இந்த கட்டணத்தில்எந்தமாற்றமும்செய்யப்படவில்லை.

ஆனால், இந்த காலக் கட்டத்தில் பெட்ரோல், டீசல் மற்றும் சிஎன்ஜி எரிபொருட்களின் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. 2013 -ம் ஆண்டில்லிட்டருக்குரூ.65 முதல் ரூ.70 வரை இருந்த பெட்ரோல் விலை தற்போது ரூ.100- ஐ தாண்டி உயர்ந் துள்ளது. அதேபோல் சிஎன்ஜி. எரி பொருள் விலையும் குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்துள்ளது.

ஆரம்ப கட்டணத்தை ரூ.40 ஆகவும், ஒவ்வொரு கிலோமீட்டருக்கும் ரூ.18 ஆகவும் நிர்ணயிப்பது குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

மேலும், ஒவ்வொரு 3 ஆண்டு களுக்குஒரு முறை எரிபொருள் விலை உயர்வின் அடிப்படையில் கட்டணத்தை தானாக மறுஆய்வு செய்யும் நடைமுறையைஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ‘கிரீன் மேஜிக்’ பால் விநியோகம் குறைக்கப்படவில்லை: ஆவின் விளக்கம்



சென்னை: ஆவின் க்ரீன் மேஜிக் பால் விநியோகம் குறைக்கப்படவோ நிறுத்தப்படவோ இல்லை என்றும், வழக்கம்போல் விநியோகம் செய்யப்படுவதாகவும் ஆவின் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆவின் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், "ஆவின் நிறுவனத்தின் பச்சை நிற பால் வகையான 'Green Magic' பாலின் விநியோகம் நிறுத்தப்பட்டதாகவோ அல்லது கணிசமாகக் குறைக்கப்பட்டதாகவோ சில ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை.

ஆவின் நிறுவனம் தனது அனைத்து பால் வகைகளையும் - Green Magic பால் உட்பட - தொடர்ந்து வழக்கம்போல் விநியோகம் செய்து வருகிறது என்பதைஇதன்மூலம்தெளிவுபடுத்தப்படுகிறது. எந்தவொரு பால் வகையின் விநியோகமும் நிறுத்தப்படவோ அல்லது கணிசமாகக் குறைக்கப்படவோ இல்லை. நுகர்வோர்களின் தேவைகளுக்கு ஏற்ப பால் தொடர்ந்து விநியோகிக்கப்பட்டு வருகிறது.

எனவே, பொதுமக்களும் நுகர்வோரும் இதுபோன்ற தவறான செய்திகளை நம்பி குழப்பமடைய வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஆவின் Green Magic பால் வழக்கம்போல எந்தவித தடங்கலும் இன்றி தொடர்ந்து விநியோகம் செய்யப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக, ஆவின் பால் உற்பத்தியை முடக்குவது, மக்கள் ஆரோக்கியத்தின் மீது தொடுக்கப்படும் நேரடித் தாக்குதல். அதிக உற்பத்தி செலவின் காரணமாக, பெரும்பாலான நடுத்தர மக்கள் பயன்படுத்தும் ஆவினின் 'கிரீன் மேஜிக்' பால் பாக்கெட்டுகளின் உற்பத்தி படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளதாகவும், கூடிய விரைவில் அப்பால் பாக்கெட்டுகள் முழுமையாக நிறுத்தப்பட உள்ளதாகவும் செய்திகள் வெளியாகின.இதற்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் கண்டனம் தெரிவித்து வந்தனர். இந்நிலையில், ஆவின் நிர்வாகம் இந்த விளக்கத்தை அளித்துள்ளது.

# ரூ.11.82 கோடி கஞ்சா கடத்திய கேரள மாடல் அழகி கைது



மும்பை : தாய்லாந்தில் இருந்து மும்பை வந்திறங்கிய 28 வயது மாடல் அழகி ஒருவர், 11 கிலோவுக்கும் அதிகமான உயர்தர கஞ்சா கடத்தி வந்ததற்காக கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

கேரளாவை சேர்ந்த மாடல் அழகி ஹர்ஷா சன்னி. இவர் 'மிசஸ் கேரளா' 2025 போட்டியில் பங்கேற்றவர் ஆவார்.

இந்நிலையில் ஹர்ஷா சன்னி, தாய்லாந்தின் பாங்காக் நகரில் இருந்து ஏர் இந்தியா விமானம் மூலம் கடந்த புதன்கிழமை நள்ளிரவு மும்பையின் சத்ரபதி சிவாஜி மகாராஜ் சர்வதேச விமான நிலையம் வந்திறங்கினார்.

அப்போது அவரது நடத்தை சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததால் விமான நிலையத்தில் அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டார்.

பிறகு அவரது டிராலி பையை அதிகாரிகள் சோதனையிட்டபோது, அதில் "பச்சை நிறப் பொருள்" நிறைந்த 12 சீல் செய்யப்பட்ட பிளாஸ்டிக் பாக்கெட்டுகள் இருப்பது தெரியவந்தது.

இதையடுத்து என்டிபிஎஸ் கருவியை பயன்படுத்தி நடத்தப்பட்ட ரசாயனப் பரிசோதனையில், அது உயர்தர 'ஹைட்ரோபோனிக் கஞ்சா' என்பது உறுதியானது.

11 கிலோவுக்கும் அதிக எடையுள்ள இந்த உயர்தர கஞ்சாவின் மதிப்பு ரூ.11.82 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

ஹர்ஷா சன்னி, மும்பை ஃபோர்ட் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டுநீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டார். இந்த போதைப்பொருள் யாருக்கு விநியோகம் செய்யப்பட இருந்தது என்பது குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.



# மும்பை தாராவி மறுசீரமைப்பு திட்டத்துக்காக மக்களை வேறு பகுதிகளில் குடியமர்த்தும் பணி தொடக்கம்

மும்பை: மும்பை தாராவி மறுசீரமைப்பு திட்டத்துக்காக அப்பகுதியில் வசிக்கும் மக்களை வேறு பகுதிகளில் குடியமர்த்தும் பணி தொடங்கப்பட்டு உள்ளது.

ஆசியாவின் மிகப் பெரிய குடிசைப் பகுதியாக மும்பை தாராவி உள்ளது. அங்கு சுமார் 2.39 சதுர கி.மீ.பரப்பில் 10 லட்சத்துக்கும் அதிகமாக மக்கள் வசிக்கின்றனர். இதில் பெரும்பாலானோர் தமிழர்கள் ஆவர்.

இந்த சூழலில் மகாராஷ்டிர அரசு சார்பில் தாராவி மறுசீரமைப்பு திட்டம் தொடங்கப்பட்டு உள்ளது. அரசு, தனியார் பங்களிப்பு திட்டத்தின் மூலம் தாராவி முழுமையாக மறுசீரமைக்கப்பட உள்ளது.

இதற்காக தாராவி மறுசீரமைப்பு திட்ட கூட்டு நிறுவனம் தொடங்கப்பட்டு உள்ளது. இதில் அதானி குழுமம் 80 சதவீத பங்குகளையும் மகாராஷ்டிர அரசின் குடிசை மறுவாழ்வு ஆணையம் 20 சதவீத பங்குகளையும் வைத்துள்ளன. திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூ.95,790 கோடி ஆகும்.

இந்த திட்டத்தின்படி தாராவியில் வசிக்கும் மக்களுக்கு 350 சதுர அடியில் நவீன வீடுகள் இலவசமாக கட்டிக் கொடுக்கப்பட உள்ளன. கட்டுமான காலத்தில் தற்காலிகமாக இடம் பெயரும் தாராவி மக்களுக்கு மாதாந்திர உதவித் தொகையும் வழங்கப்பட உள்ளது.

இந்த சூழலில் மும்பை தாராவி மறுசீரமைப்பு திட்டத்துக்காக அப்பகுதியில் வசிக்கும் மக்களை வேறு பகுதிகளில் குடியமர்த்தும் பணி தொடங்கப்பட்டு உள்ளது. முதல் கட்டமாக செக்டர் 6, சாகு நகர் பகுதியில் வசிக்கும் குடும்பங்களை வேறு பகுதிகளில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

அங்கிருந்து சுமார் 900 பேர் படிப்படியாக வெளியேற்றப்பட உள்ளனர். இதற்காக நோட்டீஸ் வழங்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து மும்பை மாநகராட்சி அதிகாரிகள் கூறியதாவது: தாராவி பகுதிகளில் இருந்து வீடுகளை காலி செய்ய ரூ.15,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மேலும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் மாதம் ரூ.22,000 வாடகை படி வழங்கப்பட உள்ளது. பெரிய வீடுகளில் வசிக்கும் குடும்பங்களுக்கு தலா ரூ.30,000 வரை வாடகை படி வழங்கப்படும்.

தாராவியில் கட்டப்படும் புதிய வீடுகளில் மக்கள் குடியேறும்வரை மாதந்தோறும் வாடகைபடி வழங்கப்படும். வரும் 2028-ம் ஆண்டுக்குள் தாராவியில் 10,000 வீடுகள் கட்டப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்படும்.

வரும் 2032-ம் ஆண்டு ஜனவரிக்குள் திட்டப் பணிகளை முழுமையாக நிறைவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

அடுக்குமாடி குடியிருப்புகள் மட்டுமன்றி பள்ளிகள், சமுதாய நலக்கூடங்கள், பூங்காக்கள், மருத்துவமனைகள், குழந்தைகள் நல மையங்கள், வணிகவளாகம், தொழிற் பூங்கா உள்ளிட்டவையும் தாராவியில் அமைக்கப்பட உள்ளன. இவ்வாறு மும்பை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ராசிபுரம் அருகே துப்பாக்கி முனையில் பெண்ணிடம் 20 பவுன் நகை கொள்ளை



நாமக்கல்:

நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் அருகே பட்டணம் அம்மன்கோவில் தோட்டத்தைச் சேர்ந்தவர் கலைச்செல்வி (58). கணவர் உயிரிழந்த நிலையில், இவர் மட்டும் தனது தோட்டத்து வீட்டில் வசித்து வந்தார். நேற்று முன்தினம் இரவு வீட்டுக்குள் புகுந்த இரு மர்ம நபர்கள் கலைச்செல்வியின் கழுத்தில் கத்தியை வைத்தும்,

துப்பாக்கியைக் காட்டியும் அவர் அணிந்திருந்த 5 பவுன் நகை மற்றும் வீட்டிலிருந்த 15 பவுன் நகை, ரூ.20,000 ரொக்கத்தைக் பறித்துவிட்டு தப்பினர். இதுதொடர்பாக ராசிபுரம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, மர்ம நபர்களைத் தேடி வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# Lt General Dhiraj Seth appointed as next Army chief, to assume office on June 30



*Lieutenant General Dhiraj Seth was appointed on Satruday the next Chief of the Army Staff (COAS), the government said in a statement, adding that he will assume office on June 30.*

*"I am directed to convey the approval of the President to the appointment of Lt General Dhiraj Seth, PVSM, UYSM, AVSM as the next Chief of the Army Staff in the substantive rank of General, with effect from 30(th) June, 2026 vice General Upendra Dwivedi, PVSM, AVSM, with a tenure upto 31st August, 2028," a statement of the Ministry of Defence said.*

*Lt General Seth was serving as the Vice Chief of the Army Staff (VCOAS), a position he assumed in April this year. He will assume the office of the army chief as the present army chief, General Upendra Dwivedi, retires from service on June 30.*

*Lt General Seth is an alumnus of the National Defence Academy, Khadakwasla, and was commissioned into the Armoured Corps in December 1986.*

*All about Lieutenant General Dhiraj Seth*

*With a career spanning nearly four decades, Lieutenant General Dhiraj Seth has had extensive experience across the operational, strategic, capability development and institutional domains.*

*"His command assignments include an Armoured Regiment in the desert sector, an Armoured Brigade in the Western Theatre, and a Counter Insurgency Force in Jammu & Kashmir," the government statement said.*


*The next COAS has commanded the Sudarshan Chakra Corps, one of army's premier strike formations; served as General Officer Commanding, Delhi Area; and commanded South Western Command and Southern Command.*

*Lt General Seth has a rare distinction of commanding the two operational Army Commands – South Western Command and Southern Command – and providing strategic oversight across critical theatres for over a period of two and a half years.*

*During the course of his service, he held several key staff and strategic appointments that significantly influenced operational planning, force management and capability development.*

## கோவை சிங்காநல்லூர் பகுதியில் உள்ள என்.ஜி. மருத்துவமனையில்

# புதிய சிறப்பு சிகிச்சை மையங்களை முன்னாள் ஐ.பி.எஸ். அதிகாரி அண்ணாமலை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்





கோவை சிங்காநல்லூர் பகுதியில், என்.ஜி. மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருகின்றது. இங்கு, அதிநவீன வசதிகளுடன் கூடிய இரு புதிய சிறப்பு பிரிவுகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காகத் துவக்கப்பட்டுள்ளது. 'சுகம் குடல் மற்றும் பெருங்குடல் சிறப்பு சிகிச்சை மையம்' மற்றும் 'மேம்படுத்தப்பட்ட நீரிழிவு பாத மருத்துவம் மற்றும் புண் பராமரிப்பு சிகிச்சை மையம்' ஆகிய இந்த புதிய பிரிவுகளை, 'விதிலீடர்ஸ்' அறக்கட்டளையின் தலைவரும், முன்னாள் ஐ.பி.எஸ் அதிகாரியுமான அண்ணாமலை திறந்து வைத்தார். என்.ஜி.மருத்துவமனையின் தலைவரும் இரைப்பை குடல் மருத்துவருமான டாக்டர் மனோகரன், தேன்மொழி, டாக்டர்.நிதிஷ் மற்றும் குடும்பத்தினர் உடன் இருந்தனர்.

குடல் ஆரோக்கியம் மற்றும் சர்க்கரை நோய் பாத பராமரிப்புக்கான முழுமையான மருத்துவ வசதிகளை ஒரே கூரையின் கீழ் வழங்குவதே இந்த புதிய மையங்களின் முக்கிய நோக்கமாகும் என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது. நிகழ்ச்சியில் அண்ணாமலை கூறியதாவது.

இன்றைய நவீன காலகட்டத்தில் மாறிவரும் உணவுப் பழக்கவழக்கங்கள் மற்றும் மன அழுத்தம் காரணமாக பல்வேறு உடல்நலக் குறைபாடுகள் அதிகரித்து வருகின்றன. குறிப்பாக நாம் உண்ணும் உணவில் தரம் குறைந்து வருவதும், பாக்கெட் உணவுகள் மற்றும் எண்ணெய் பலகாரங்களை அதிகமாக உட்கொள்வதும் மனித உடலில் செரிமான மண்டலத்தைப் பெருமளவில் பாதிக்கின்றன. இதன் விளைவாக, சாதாரண செரிமானக் கோளாறுகள், கேஸ் தொந்தரவுகள் முதல் குடல் புற்றுநோய் வரை பல்வேறு தீவிரமான பாதிப்புகள் ஏற்படுகின்றன. நோய் வந்த பின் குணப்படுத்துவதை விட வரும் முன் காப்பதே சிறந்தது என்ற அடிப்படையில் 'பிரிவென்டிவ் ஹெல்த்கேர்' முறையின் முக்கியத்துவம் தற்போது உலகளவில் அதிகரித்துவருகிறது. மேலை நாடுகளில் பரவலாக இருக்கும் இந்த விழிப்புணர்வு, தற்போது நம் நாட்டிலும் மெல்ல தொடங்கப்பட்டு உள்ளது. பிரச்னைகள் தீவிரமடைந்து லட்சக் கணக்கில் பணம் செலவழிப்பதை விட, ஆரம்ப நிலையிலேயே உடலின் தேவைகளையும் குறைபாடுகளையும் கண்டறிந்து தற்காத்துக் கொள்வது அவசியமாகிறது என்று கூறினார்.

# தவெகவில் இணைந்தார் பா.ஜ.க. நிர்வாகி விஜயதரணி; அதிமுக முன்னாள் அமைச்சர் பச்சைமால் உள்ளிட்ட சிலரும் ஐக்கியம்



சென்னை:

பாஜக நிர்வாகி விஜயதரணி தவெகவில் இணைந்தார். அவருடன் அதிமுக முன்னாள் அமைச்சர் பச்சைமால், முன்னாள் எம்பிக்கள் வனரோஜா, இளவரசன், ஆகியோரும் தவெகவில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுக, அமமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகளைச் சேர்ந்த பலர், சென்னை பனையூரில் உள்ள தவெக அலுவலகத்திற்கு வந்து அக்கட்சியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான ஆனந்த் முன்னிலையில் தங்களை இணைத்துக் கொண்டனர்.

அதிமுகவைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் பச்சைமால், முன்னாள் எம்பிக்கள் வனரோஜா, இளவரசன், பரமக்குடி முன்னாள் எம்எல்ஏ முருகேசன், முன்னாள் எம்எல்ஏ ரவி, திருநெல்வேலி முன்னாள் மேயர் புவனேஸ்வரி, வட சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் பாலகங்கா உள்ளிட்டோர் தவெகவில் இணைந்தனர்

இதேபோல், பாஜகவைச் சேர்ந்தவரும், விளவங்கோடு முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான எஸ். விஜயதரணி, திருப்பூர் பாஜக மகளிர் அணி நிர்வாகி கே. ஜெகதீஸ்வரி உள்ளிட்டோர் தவெகவில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

தவெகவில் இணைய வருகை தந்தவர்களுக்கு, அமைச்சர் ஆனந்த் மற்றும் அமைச்சர் ஆதவ் அர்ஜுனா ஆகியோர் கட்சித் துண்டை அணிவித்து கட்சியில் இணைத்துக்கொண்டனர்.

தவெகவில் இணைந்த பிறகு செய்தியாளர்களிடம் பேசிய விஜயதரணி, "மக்களிடம் மாற்றத்தைக் கொண்டு வந்த கட்சி தவெக. நாடே திரும்பிப் பார்க்கக்கூடிய வகையில் சிறந்த ஆட்சியை தவெக வழங்கி வருகிறது.

இன்னும் 10-15 ஆண்டுகளில் இந்தியாவையே வழிநடத்தக்கூடிய இடத்தில் விஜய் இருப்பார். பாஜகவில் இரண்டரை ஆண்டு காலம் எந்தப் பணியும் இல்லாமல் பயணித்தேன். அரசியலில் பணி என்பது முக்கியம். மக்கள் பணியாற்ற வேண்டும் என்று கருதும் என்னைப் போன்றவர்களுக்கு தவெக சிறந்த இடம் என்று கருதுகிறேன். எங்கள் உழைப்பு மக்களுக்குத் தேவை என்பதை அறிந்து அவர்கள் எங்களை அழைத்து, இணைத்திருக்கிறார்கள்.

தமிழகத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்த கட்சி, ஊழலற்ற ஆட்சியை அளிக்கும் கட்சி, போதை கலாச்சாரத்தை ஒழிப்பேன் என்ற சபதம் செய்துள்ளவரை தலைவராகக் கொண்ட கட்சி, பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் கட்சி என்ற அடிப்படையில் நான் உட்பட பலரும் தவெகவில் இணைந்துள்ளோம்" எனத் தெரிவித்தார்.

# நாங்குநேரி அருகே கார் ஆட்டோ மோதி இருவர் உயிரிழப்பு; 5 பள்ளி குழந்தைகள் காயம்





திருநெல்வேலி: நாங்குநேரியில் பள்ளி மாணவர்கள் பயணித்த ஆட்டோ மீது கார் மோதிய விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவத்தின் அதிர்ச்சி தரும் சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரியில் செயல்பட்டு வரும் தனியார் பள்ளி மாணவர்கள் சிலர் தினமும் ஆட்டோவில் வந்து செல்வது வழக்கம். அந்த வகையில் நேற்று (ஜூன் 12) மாலை பள்ளி முடிந்த பிறகு, மாணவர்களை ஏற்றிக் கொண்டு ஆட்டோ திருநெல்வேலி நோக்கி சென்று கொண்டிருந்தது.

நாங்குநேரி சுங்கச்சாவடி அருகே தேசிய நெடுஞ்சாலையில் ஆட்டோ சென்று கொண்டிருந்த போது நாகர்கோவிலில் இருந்து திருநெல்வேலி நோக்கி வந்த கார் ஒன்று திடீரென ஆட்டோவின் பின்பக்கத்தில் அதிவேகமாக மோதியது.

பின்னர் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையில் தலைகீழாக கவிழ்ந்தது. இந்த விபத்தில் காரில் பயணம் செய்த நாகர்கோவிலை சேர்ந்த ராதா (72) சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பலத்த காயமடைந்த நிலையில் நடராஜன் (70) என்பவரை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே அவரும் உயிரிழந்தார்.

இந்த விபத்தில் காரை ஓட்டி வந்த ராஜமோகன் பலத்த காயமடைந்த நிலையில், பாளையங்கோட்டையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலும் இந்த விபத்தில் ஆட்டோவில் பயணம் செய்த 5 பள்ளி மாணவர்கள் மற்றும் காரில் இருந்த ஒருவர் உள்பட 6 பேருக்கு லேசான காயம் ஏற்பட்டது. அவர்களும் சிகிச்சைக்காக அருகில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். இந்த விபத்து குறித்த சிசிடிவி காட்சிகள் தற்போது வெளியாகி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளன. அதில், மெதுவாக சென்று கொண்டிருந்த ஆட்டோ மீது பின்னால் அசுர வேகத்தில் வந்த கார் மோதும் காட்சிகள் பதிவாகி உள்ளன. கார் மோதிய வேகத்தில் ஆட்டோ அப்படியே சாலையில் கவிழ்ந்த காட்சிகளும் அதில் உள்ளன.

சிசிடிவி காட்சிகளின் அடிப்படையில் போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அதே சமயம் விபத்தை ஏற்படுத்திய கார் ஓட்டுநர் பலத்த காயத்துடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதால் விபத்துக்கான முழுமையான காரணம் குறித்து போலீசாரால் அறிய முடியவில்லை.

பிரேக் பிடிக்காமல் கார் கட்டுப்பாட்டை இழந்ததா? அல்லது ஓட்டுநரின் அலட்சியத்தால் விபத்து நிகழ்ந்ததா? போன்ற கேள்விகள் எழுந்துள்ள நிலையில் போலீசார் தொடர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.